# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.159 / 2020

வா.சா.1– குறுக்கு விசாரணை – நாள் 12–09–2025.

பெயர் = சந்திரசேகர் வா.சா.–1

வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 15,16,17 ம் பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.–

(1) நான் இரண்டு லக்கச் சொத்துக்களுக்கு மட்டும் பாகப்பிரிவினை கோரி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவாச்சொத்துக்கள் பொறுத்து 1 முதல் 14 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்யப்பட்ட விவரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 2019 ம் வருடம் தான் எனக்குத் தெரியவந்தது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 பாகப்பத்திரத்தில் எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்படாத சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து செல்லாது என வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 15.05.2009 ம் தேதி பொது அதிகார ஆவணம் 14.07.2009 ம் தேதிய பொது அதிகார ஆவணத்தின் மூலம் கொடுக்கப்பட்ட கிரய ஆவணம் 01.06.2011 ம் தேதி கிரயப்பத்திரம் 14.05.2014 ம் தேதிய கிரய ஆவணம் 18.09.2006 ம் தேதிய கிரய ஆவணம் 24.08.2017 ம் தேதிய கிரய ஆவணம் ஆகிய ஆவணங்கள் தமிழ்நாடு பதிவு சட்டப்படி முறையாக பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் அந்த ஆவணங்களை 15,16 அதிகாரிகள் முறையாக ஆய்வு செய்து பதிவு செய்துள்ளனர் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்களை ரத்து செய்வதற்கு சட்டத்தில் இடமில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2025.09.12 12:31:20 +0530